https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் மனிதநேய வெளிப்பாடுகள்

**ச. சரவண குமார்**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி தன்னாட்சி, கோவை- 18

**முனைவர் செல்வராஜ்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி தன்னாட்சி, கோவை- 18

ABSTRACT
Although all his poems express various thoughts, the poet Palanibharathi has acted as a humanist. This research article aims to identify the expressions of humanity found in his poems.

## முன்னுரை

சமூகத்தின் செயல்பாடுகளை விளக்குகின்ற கவிஞர் அத்துடன் நின்று விடாமல் தெளிவான சமூகப்போக்கு குறித்த கருத்தாடல்களை முன்வைத்துச் செல்கிறார். இத்தகைய சூழலில் படைப்பாளனின் சிந்தனையையும் தத்துவப் பின்னணியையும் அறிந்து கொள்ள படைப்பாளனின் இலக்கியங்களை அதன் ஊடான மையக் கருத்தியலைச் சமூகமானது அறிந்து ஆராய வேண்டியது இன்றியமையாத ஒன்றாகின்றது. இந்த அடிப்படையில் பழநிபாரதியின் படைப்புகளில் காணப்படுகின்ற மனிதநேயம் குறித்த சிந்தனைகளை ஆய்வதாக இக்கட்டுரை பயணிக்கின்றது.

## ஆய்வின் நோக்கம்

புத்திலக்கியங்கள் அனைத்தும் பல்வேறு சிந்தனைகளை வெளிப்படுத்தியிருப்பினும் கவிஞர் பழநிபாரதி மனிதநேயம் மிக்கவராகச் செயல்பட்டுள்ளார். அவரது கவிதைகளில் காணப்படுகின்ற மனிதநேய வெளிப்பாடுகளைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை நகர்கின்றது.

## ஆய்வின் கருதுகோள்

‘பழநிபாரதியின் கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள் கட்டாயம் வெளிப்பட்டிருக்க வேண்டும். அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்’ எனும் கருதுகோளை முன்வைத்து இந்தக் கட்டுரை அமைகின்றது.

## பழநிபாரதியின் கவிதைகள் மனிதநேயச் சிந்தனைகள்

சமூகத்தின் அதிகார வரம்புக்குட்படாத எளிய மனிதர்கள்தான் அதிகார பலம் மிக்கவர்களால் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவர்களின் உழைப்பைச் சுரண்டி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளையோ சரியான ஊதியத்தையோ வழங்காத சமூக சூழலைக் கண்டித்து அவர்கள் மீது மனிதநேயம் காட்ட வேண்டும் என்று கவிஞர் கவிதைகள் மூலமாக வலியுறுத்துகின்றார்.

கூலித்தொழிலாளர்கள், மீனவர்கள், பிச்சைக் காரர்கள் இத்தகைய எளிய மனிதர்களின்

வாழ்வியலையும் கவிஞரின் படைப்புகளின் வழியே அவர்களின் சூழலையும் இச்சமூகம் அவர்களுக்கு இழைத்திருக்கின்ற கொடுமை களையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. கவிஞர்கள் சமூகத்தைச் செங்குத்தாகப் பார்க்கின்ற போதும் அடித்தளத்தையும் வட்டமாகப் பார்க்கிறபோதும் விளிம்பையும் கவனிப்பவர்களாக இருக்கிறார்கள். சமூக அதிகாரங்களில் பங்கெடுக்காத அத்தகைய மனிதர்களின் வாழ்வியல் சூழலையும் சமூகத் தின் மனிதநேயமற்ற செயலையும் படம் பிடித்துக் காட்டுவதை,

*"நாங்கள்*
*உங்கள் நிலங்களை*
*உழுதோம்*
*நீங்கள்*
*எங்கள் பசியை*
*அறுவடை செய்தீர்கள்*
*உங்கள் அடுப்புகள் எரிய*
*விறகுகள் வெட்டினோம்*
*நீங்கள்*
*எங்கள் குடிசைகளை*
*எரித்தீர்கள்*
*உங்கள் பெண்களின்*
*தீட்டுத் துணிகளையும்*
*துவைத்துக் கொடுத்தோம்*
*நீங்கள்*
*எங்கள் பெண்களின்*
*நிர்வாணத்தையும் கிழித்தீர்கள்"*

எனும் வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. 'புறாக்கள் மறைந்த இரவு' கவிதைத் தொகுப்பில் உள்ள 'அப்போது எங்களுக்குத் தெரியாது' எனும் கவிதை ஏழை எளிய மக்களின் வாழ்வையும் அவர்களுக்கு எதிராக நடக்கின்ற மனிதநேயமற்ற செயல் களையும் எடுத்துக்காட்டி அவர்களிடம் மனிதநேயத்தோடு நடந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. முதலாளி தொழிலாளி என தொடர்கிற சமூகத்தில் முதலாளிகளின் உண்மைக்கு மாறான செயலுக்கு எதிராகக் குரல் எழுப்பி சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளைக் களைய மனித நேயத்தோடு அவர்களையும் மனிதர்களாகப் பார்க்க வேண்டும் என்கிறது மேற்கண்ட கவிதை.

தமிழகத்தில் மீனவர்கள் மீதான அத்துமீறல் களைக் கண்டிக்கும் கவிஞர், அரசானது மீனவர்கள் மீது நேயத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கவிதைகளின் வழியாக சுட்டிக்காட்டுகிறார். தன் காதலியைச் சந்தித்து இராமர் பாலத்திற்குக் கீழே உரையாடிக் கொண்டிருக்கும் கவிஞரின் சூரியனுக்கு கீழ் ஒரு வெள்ளைக் காகிதம் (பக்.28) எனும் தொகுப்பின் கவிதையில் குறிப்பிடுவதை,

*"எங்கள் தலைக்கு மேல்*
*மீனவர்களின் பாடல்களிலும்*
*துள்ளிக்குதித்தன*
*வெள்ளி மீன்கள்*
*அவளை நான்*
*முத்தமிட நெருங்கிய தருணம்*
*சுட்டது*
*சிங்களவனோ*
*இத்தாலியனோ*
*அமெரிக்கனோ*
*வெடித்து ஒழுகியது*
*மீனவ ரத்தம்*
*பிறகு நாங்கள்*
*சந்திக்கவேயில்லை"*

எனும் அடிகள் மூலம் அறிய முடிகின்றது. மீனவனின் ரத்தம் தெளித்த கடற்கரையில் மீண்டும் தன் காதலியைச் சந்திக்கவே இல்லை எனக் குறிப்பிடும் கவிஞர். **'சூரியனுக்கு கீழ் ஒரு வெள்ளை காகிதம்'** (பக்.64) எனும் தொகுப்பில் ஒரு வெள்ளைக் காகிதத்தை வைத்து என்ன செய்ய முடியும் என கேள்விகளுக்கு வரும் பதில் ஒன்றாக இருப்பதை,

*"இராமேஸ்வரத்தின் கடலில்*
*இந்தக் காகிதத்தால்*
*ஒரு படகு செய்து அனுப்பலாம்*
*இலங்கை ராணுவத்தால்*
*கொல்லப்படும் மீனவரோடு*
*அது கரை ஒதுங்கினால்*
*நான் என்ன செய்ய முடியும்"*

எனும் வரிகள் மூலம் கவிஞர் குறிப்பிடுகின் றார். சுட்டுக் கொல்லப்படும் தமிழக மீனவர் கள் பற்றிய செய்தியைக் குறிப்பிட்டு வருத்தத்தைப் பதிவு செய்கிறார். எல்லை தாண்டி மீன்பிடித்ததாகச் சொல்லி மீனவர் கள் சுட்டுக் கொல்லப்படுவது குறித்த செய்தியைக் குறிப்பிட்டு மீன்பிடிப்பவர்க ளைத் தண்டிப்பது எந்த வகையில் நியாயம் என்பதாகக் கேள்வி எழுப்பி அவர்கள் மீது மனிதநேயம் காட்ட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

பொருளாதார மற்றும் குடும்பச் சிக்கல் களால் பாதிக்கப்பட்டு இரந்துண்ணும் சிலரின் வாழ்க்கையை,

"காலற்ற ஒருத்தியின்
வாழ்க்கை நடக்கும்
ஊன்றுகோல் இல்லாத
அந்தகனோடு
விரல்களில்லாத கைகளில்
அலுமினிய தட்டுகளைக் குலுக்கும்
வாழும் பிணங்கள்
அழுக்கில் நைந்த
ஊனச் சேலையைத்
திருப்பி கட்டுவாள்
அந்தரங்கமாய்
ஒரு பருவக்காரி
விற்காத கற்பூரங்களோடு
வீட்டிற்குத் திரும்பும்
மனிதப் பிஞ்சுகள்
வாழ்க்கைக் காற்றில்
கற்பூரங்களாய்க் கரைந்து
வரன் கேட்டு
வருடம் பலவாய்
வந்து போகும்
திரைப்படச் சுவரொட்டிகளை
அசைபோட்டபடி
மஞ்சளோடு
வாலிபம் தீர்ந்த
பூப்பெய்திய
கனவுகள்
பசியின்
தேசிய நெடுஞ்சாலையாய்
விரிந்த அந்த வீதியில்
செருப்புகளுக்கும்
உத்திரவாதம் உண்டு
இவர்களைத் தவிர"

எனும் அடிகள் மூலம் உணர முடிகின்றது. ‘வெளிநடப்பில்’ (பக்.67) பதியப்பட்டுள்ள கவிதையானது வறுமைக்குள் சிக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் சாதாரண மனிதர்களின் வாழ்க்கையைச் சுட்டிக்காட்டி வசதி படைத்தவர்கள் அவர்கள் மீது நேயத்தோடு நடந்து உதவி செய்ய வேண்டும் என உணர்த்திச் செல்கிறது. மேலும் தன்பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு என வாழும் மக்களைக் கவிஞர் சாடுகின்றார். கவிதையின் நிறைவில் இத்தனை சோகங்கள் நடக்கும் இடம் ஒரு கோயிலுக்கானது. அந்த கோவிலில் அம்மன் குங்குமம் மணக்கும் அழகிய கோலத்தில் சிரித்துக் கொண்டிருக் கிறாள். ஆனால் தெப்பக்குளத்தின் கடைசிப் படிக்கட்டில் ஒரு அனாதைப் பிணம் ஒன்று கிடக்கிறது என்று நிறைவு செய்து மனிதநேயம் சாதாரண மக்களுக்கு அவசியமானது என்று உணர்த்துகின்றார். பணம் செலவு செய்து உயிரற்ற கடவுளை (கல்லை) வணங்கும் சமூகத்திடம் உயிருள்ள மனிதர்களையும் சிறிது கவனத்தில் கொள்ளுங்கள் என்ற புரிதலைக் கவிஞர் ஏற்படுத்துவதை மேற்கண்ட கவிதை உணர்த்துகின்றது.

பசி மனித வாழ்வில் மிகக் கொடியது. அதைத் தீர்க்க வேண்டியது. அதுவே அவசியம் கடைபிடிக்க வேண்டிய மனித நேயம் என்பதை வலியுறுத்தும் மகாகவி 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் ' என்கிறார் அந்த வழியில் கவிஞர் பழநிபாரதியும் வழி மொழிந்து கவிதைகளில் மனிதநேயத்திற் கான அவசியத்தை வலியுறுத்துகிறார். கடவுள் உருவங்களை வரைந்து அதன் வாயிலாகக் கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் ஒருவரது வாழ்க்கையை விளக்கும் கவிஞர்,

"கடவுள்கள் எல்லோரும்
அவனோடு
தொடர்பில் இருக்கிறார்கள்
சிவன் ஏசு பெருமாள்
லட்சுமி சரஸ்வதி
அனுமார் பிள்ளையார்
கன்னிமேரி
இடத்திற்குத் தகுந்தாறுவாறு
அல்லது தேவைக்குத் தகுந்தவாறு
அவன் அவர்களை
அழைப்பான்
அவன் வைத்திருக்கும்
வண்ண வண்ண சாக்பீஸ்களின் வழியே
அவர்கள் இறங்கி வருவார்கள்
தெருவோரம்
மக்கள்
கடவுளைக் கண்ட கணிப்பில்
காசுகளை இறைப்பார்கள்
அல்லா மட்டும்
அவனோடு

ஒத்துப் போக முடியவில்லை
உருவமற்ற
ஒரு கண்டிப்பான ஒப்பந்தம்
காலாவதி ஆகாததால்
அவனுக்கும்
அது குறித்த
கவலைகள் இல்லை
மற்றபடி
கடவுள்தான் அவனுக்கு
இட்லி வாங்கித் தருகிறார்கள்
தேநீர் வாங்கித் தருகிறார்கள்
வெண்சுருட்டு வாங்கி தருகிறார்கள்
மற்றபடி தங்களை அழைக்க
சாக்பீஸ்களையும்
தந்து போகிறார்கள்"

எனும் வரிகள் மூலம் புலப்படுத்துகின்றது. 'தனிமையில் விளையாடும் பொம்மை' (பக்.41, 42) கவிதைப் புத்தகத்தின் 'கடவுளின் தொடர் பாளன்' என்னும் தலைப்பிலான கவிதை படம் வரைந்து பிச்சை எடுக்கும் ஒருவனின் வாழ்க்கையைச் சொல்லி அவனுக்கான வாழ்க்கைக்குக் கடவுள்கள் உதவி செய்கிறார் கள். மனிதர்களும் உதவி செய்தால் அவன் வாழ்வு நலம் பெறும் என்பதை வலியுறுத்து கிறது. அந்தப் புத்தகத்தின் 'சிவப்பு மஞ்சள் பச்சை' எனும் தலைப்பிலான கவிதை குழந்தைகளைக் கடத்தி அதற்குப் போதை மருந்துகளைச் செலுத்தி அதன் மூலமாகப் பிச்சை எடுக்கும் கொடூரத்தைச் சொல்லி அதைக் கண்டும் காணாமல் செல்கிற மனிதர் கள் நேயம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். தவறு நடக்கும் பொழுது அதைக் கடந்து செல்லாமல் தவறைக் கண்டிக்க வேண்டும் அப்போதுதான் மனிதநேயம் உயிர்போடு இருக்கும் என்பதைக் கவிஞர் பதிவு செய்கிறார்.

## முடிவுரை

வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை என்ற அடிப்படையில் அனைத்து மக்களும் போற்றுகின்ற வகையில் வாழ வேண்டும் என்று கவிஞர் தெளிவாகக் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

காலையிலிருந்து மாலை வரை உழைக்கின்ற உழைப்பாளர்களுக்கு அவர்களது வேலைக் கேற்ற ஊதியத்தினை வழங்க வேண்டும் என்பதையும் அவர்களது உழைப்பைச் சுரண்டும் முதலாளிகளின் அதிகார வர்க்கத்தினை கவிஞர் கண்டிப்பதையும் உணர முடிகின்றது.

மேலும் மீனவர்களுடைய வாழ்க்கையைச் சுட்டிக்காட்டி அவர்கள் படும் வேதனைக ளையும் எடுத்துரைத்து இனிமேல் எந்த ஒரு தமிழக மீனவரும் இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிக்கு இறையாகக் கூடாது என்ற மனிதநேய சிந்தனையைக் கவிஞர் கவிதை களின் ஊடாக வெளிப்படுத்துவதை அறிய முடிகின்றது.

வயது மூப்பு காரணமாகவும் உடலில் ஏற்பட்ட நோய் காரணமாகவும் குடும்பத்தா ரால் ஒதுக்கப்பட்ட முதியோர்கள் இறந்து அனாதை பிணமாகக் காணப்படுவதைக் கவிஞர் வலியுறுத்தி, ஆடம்பரச் செலவு களைத் தவிர்த்து வறுமையில் உள்ளோர்க ளுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி தன் பெற்றோர்கள்போல பார்த்துக் கொள்ள வேண்டும் எனும் கருத்தைக் கவிஞர் கவிதைகள் வழியாகப் பதிவு செய்துள்ளார். வசதி படைத்தவர்கள் கொஞ்சம் வசதி குறைந்தவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும் எனும் கருத்தை ஆழமாகப் பதிவு செய்துள்ளதை அறிய முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. பழநிபாரதி, 2014, வெளிநடப்பு, குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17.
2. பழநிபாரதி, 2014, காதலின் பின்கதவு, குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை-17.
3. பழநிபாரதி, 2014, புறாக்கள் மறைந்த இரவு, குமரன் பதிப்பகம், 19, கண்ண தாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17.
4. பழநிபாரதி, 2014, தனிமையில் விளையா டும் பொம்மை, குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17.
5. பழநிபாரதி, 2014, சூரியனுக்கு கீழே ஒரு வெள்ளைக் காகிதம், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17.